<u>தமிழ் நாடு அரசு</u>

<u>நெடுஞ்சாலைத்துறை</u>

<u>சென்னை வட்டம், கிண்டி, சென்னை-600 032.</u>

<u>தகுதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இரு உறைகள் முறை)</u>

**<u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20/2005-2006/தவஅ</u>** **<u>நாள்: 04.07.2005.</u>**

தமிழ்நாடு ஆளநருக்காகவும் அவருடைய சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) சென்னை வட்டம், பிளாக் எண்.3, எல்காட் கட்டிடம், கிண்டி, சென்னை-32 அவர்களால் கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு கீழ்க்கண்டவாறு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள், பிளாக் எண்.3, எல்காட் கட்டிடம், கிண்டி, சென்னை-32ல் உள்ள அவரது அலுவலகத்தில் **11.08.2005** அன்று பிற்பகல் **3.00** மணி வரை (அலுவலக கடிகாரப்படி) வரவேற்கப்படுகிறது. கீழ்கண்ட பணிகளுக்கு (இரு உறைகள் முறை) முன் தகுதி காணலுக்கான ஆவணங்கள் மற்றும் முன்வைப்புத் தொகை தனி உறையிட்டு மற்றும் வேலைக்கான சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தனி உறையிட்டு மேலுறையிட்டது (இரு உறைகள் முறை) வரவேற்கப்படுகிறது.

மேற்கண்ட ஒப்பந்த அழைப்பில் முன்தகுதி காணலுக்கான படிவத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்புடைய ஒப்பந்தக்காரர்கள் மற்றும் இத்துறையில் பதிவுபெற்ற மாநில அளவிலான ரூ.25.00 லட்சத்திற்கு மேல் பண வரம்புடன் கூடிய முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் மட்டும் போட்டிக்கு தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

| வ. எண் | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை | முன் வைப்புத் தொகை | முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்த படிவம் கிடைக்குமிடம் |
|---|---|---|---|---|---|
| | **<u>சென்னை நகரை அழகுப்படுத்தும் திட்டம்</u>** | | | | |
| | **<u>சென்னை மாநகரச் சாலைகள் (நெ) கோட்டம (முதல் அழைப்பு):</u>** | | | | |
| 1. | சென்னை மாநகரச் சாலைகள் உட்கோட்டம்-1ல் உள்ள சாலைகளின் ஓடுதளத்தை புதுப்பித்தல் மற்றும் நடைபாதை சீரமைத்தல். | ரூ. 1180.00 லட்சம் | ரூ. 6,00,000 | 12 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை, சென்னை மாநகரச் சாலைகள். |
| 2. | சென்னை மாநகரச் சாலைகள் உட்கோட்டம்-2ல் உள்ள சாலைகளின் மைய தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் நடைபாதை சீரமைத்தல். | ரூ. 513.00 லட்சம் | ரூ. 2,66,500 | 9 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை, சென்னை மாநகரச் சாலைகள். |
| 3. | சென்னை மாநகரச் சாலைகள் உட்கோட்டம்-3ல் உள்ள சாலைகளில் மைய தடுப்பு, நடைபாதை மற்றும் ஓடுதளத்தை சீரமைத்தல். | ரூ. 745.00 லட்சம் | ரூ. 3,82,500 | 9 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை, சென்னை மாநகரச் சாலைகள். |

வரையறுக்கப்பட்ட வங்கியிலிருந்து வழங்கப்பட்ட வைப்புத் தொகை ரசீது, கேட்பு வரைவோலை (Demand Draft), ரத்து செய்ய முடியாத வங்கி உத்திரவாதம், அஞ்சலக சேமிப்பு பத்திரங்கள் முதலியன கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் பெயரில் ஈடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் முதிர்வுபெறாத இந்திர விகாஸ் பத்திரங்கள் முன்வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள்பெயரில் ஈடு செய்யப்படாத முன் வைப்புத் தொகைகள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் ஒப்பந்தப்புள்ளியும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மேற்கண்ட பணிக்கு முன் தகுதி காணலுக்கான ஆவணம் மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தபால் மூலமாகவோ, கூரியர் மூலமாகவோ தனி நபர் மூலமாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ கண்காணிப்புப் பொறியாளர்(நெ) சென்னை வட்டம், சென்னை-32 அவர்களின் அலுவலகத்திற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்படுவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலமான **11.08.2005** அன்று பிற்பகல் **3.00** மணிக்குள் கிடைக்கும்படியாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு உரிய நேரத்தில் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். கூரியர் அஞ்சல், தனி நபர் ஆகியோர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை எந்த வகையிலும் பொறுப்பு ஏற்காது.

மேற்கண்ட வேலைக்கு முன் தகுதி காணலுக்கான படிவம் மற்றும் பட்டியலிட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளி படிவம் கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் அவர்களது எல்லைக்குட்பட்ட அரசு கருவூலத்தில் செலுத்தி (திருப்பித்தரப்பட மாட்டாது), செலுத்துச்சீட்டுடன் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் **08.08.2005** வரை எழுத்து மூலம் நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அவரது ஏஜென்ட் மூலமாகவோ விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை மற்றும் விற்பனை வரிக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையினை ஷெடியூல்டு வங்கிகளிலிருந்து கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் அவர்கள் பதவி பெயரில் எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலை வடிவத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

<u>கணக்குத் தலைப்பு</u>

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை | ரூ.5,000/- | 8658-Highways suspense account III other receipts to the credit of the Divisional Engineer(H) Chennai City Roads. |
| விற்பனை வரி | ரூ. 650/- | 0040-Sales Tax |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பதிவு அஞ்சலிலோ கூரியர் மூலமாகவோ பெற விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் தமது விருப்பத்தினை எழுத்து மூலம் தெரிவிப்பதோடு நமூனாவுக்குரிய கட்டணத்தை மேற்கூறிய முறையில் செலுத்தி அதற்கான ரசீது இணைத்து அனுப்பிவைத்தால் அவர்களது சொந்த தபால் செலவு மற்றும் பொறுப்பில் ஆவணங்கள் அனுப்பி வைக்கப்படும். இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் எந்தவிதத்திலும் பொறுப்பு ஏற்கமாட்டார்கள்.

மேற்கண்ட வேலைக்கு பூர்த்தி செய்யப்பட்ட முன் தகுதி காணலுக்கான மற்றும் பட்டியலிடப்பட்ட சதவீத வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புப் பொறியாளர்(நெ) சென்னை வட்டம், பிளாக் எண்.3, எல்காட் கட்டிடம், கிண்டி, சென்னை-32 என்ற முகவரியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் 11.08.2005 அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். அதில் முன் தகுதி ஆவணங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் 11.08.2005 அன்று பிற்பகல் 3.15 மணி அளவில் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் கண்காணிப்புப் பொறியாளர்(நெ) சென்னை வட்டம் அவர்களால் திறக்கப்படும். முன் தகுதி ஆவணங்களை ஆய்வு செய்து தேர்வு செய்யப்பட்ட பின்னர் விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படுவதற்கான தேதி தகுதி உடைய ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்பட்டு திறக்கப்படும். மற்றவர்களின் விலைப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

குறிப்பு :-

1) ஒப்பந்த நமூனாக்கள் இத்துறையில் பதிவு செய்யப்பட்ட முதல் வகுப்பு ஒப்பந்தக் காரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். பதிவு நடப்பாண்டில் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். புதுப்பிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே ஒப்பந்த நமூனா வழங்கப்படும்.

2) **வ.எண். 1 மற்றும் 3 ல்** உள்ள பணிகள் மைய சுடுகலவை இயந்திரம் மற்றும் பேவர் பினிஷர் துணைக் கொண்டு செய்யவேண்டும். மைய அரசின் தரைப் போக்குவரத்துத்துறை நிர்ணயம் செய்துள்ள நான்காவது திருத்தத்தின்படி பணிகளை செயலாக்கம் செய்யவேண்டும். ஒப்பந்தக்காரர்கள்/ நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி நமூனா வாங்கும்பொழுது மத்திய சுடுகலவை இயந்திரம், மற்றும் பேவர் பினிஷர் இயந்திரங்கள் தங்களுக்கு சொந்தமானது என்பதற்கான உரிமை ஆவணங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி நமூனா வழங்கப்படும். மேற்படி இயந்திரங்கள் சொந்தமாக வைத்திருக்காதவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் எக்காரணத்தைக்கொண்டு முன்னிட்டும் வழங்கப்படமாட்டாது.

3) கண்காணிப்புப் பொறியாளர்(நெ), சென்னை வட்டம், கிண்டி, சென்னை-32 அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.

4) நடப்பு ஆண்டு வருமானவரி மற்றும் விற்பனை வரி செலுத்தியதற்கான நிலுவையில்லா சான்றிதழை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

5) மேற்காணும் சாலை வேலைக்கான விபரங்களுக்கு கோட்டப் பொறியாளர்(நெ) சென்னை மாநகரச் சாலைகள் அவர்களை தொடர்பு கொள்ளவேண்டும்.

6) இத்துறையில் பதிவு செய்து பதிவு நடப்பில் உள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இவ்வொப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம். மேற்படி ஒப்பந்தக்காரர்கள் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்த படிவங்கள் பெற்று ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளாமல் இருந்தாலோ அவர்களின் பதிவு காலாவதியாகிவிடும்.

முன் தகுதி காணலுக்கான குறைந்த பட்ச தகுதிகள்:

1) ஒப்பந்தக்காரர்கள் தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரும் வேலையில் 40% மதிப்பிற்கு வருடாந்திர வேலை செய்து முடித்த அளவுடன் (Annual turn over) அதாவது முன்னேற்றத்தில் உள்ள அல்லது செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் பெற்று சாதித்திருக்க வேண்டும்.

2) ஒப்பந்தக்காரர்கள் தற்போது உள்ள பெயரிலேயே முதன்மை ஒப்பந்தக்காரராக கடந்த 5 வருடங்களில் ஏதேனும் ஒரு பணியில் (நெடுஞ்சாலை பணிகள்/ ரயில்வே பணிகள்/ இந்திய விமான நிலைய ஆணைய பணிகள்) தற்போது உத்தேசிக்கப்பட்ட பணிகளில் 40% பணிகள் வெற்றிகரமாக செய்து முடித்திருக்க வேண்டும்.

3) முன்தகுதி கோரப்பட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள பணியின் முக்கிய இனங்களில் 40% அளவுகள் கடந்த 5 வருடங்களில் ஏதேனும் ஒரு பணியிலாவது இதே போன்ற இனங்களை செய்து முடித்த குறைந்தபட்ச அனுபவம் இருக்க வேண்டும்.

4) ஒப்பந்தக்காரர்கள் இவ்வேலையை முடிப்பதற்கு போதுமான கருவி தளவாடங்கள் வைத்திருக்க வேண்டும்.

5) ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த வேலையை செயல்படுத்தும் வகையில் பொருள் திறன் (Bid capacity) கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6) கூட்டு முயற்சியுடன் (Joint venture) கூடிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இடம் : சென்னை-32
நாள் : 04.07.2005.

கண்காணிப்புப் பொறியாளர்(நெ),
சென்னை வட்டம், சென்னை-32.